# நெல்லையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற — கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழா நிகழ்ச்சிகள்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2025) திருநெல்வேலியில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில், இயேசு கிறிஸ்து பிறப்பை குறிக்கும் கிறிஸ்துமஸ் குடிலை திறந்து வைத்தார். இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு, அமைச்சர் பெருமக்கள் – கே.என். நேரு, எ.வ. வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, திருமதி. பி. கீதா ஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, பி.வில்சன், ராபர்ட் புரூஸ், டாக்டர் ராணி ஸ்ரீகுமார், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் முனைவர் இனிகோ இருதயராஜ், அப்துல் வகாப், ரூபி மனோகரன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை முன்னாள் தலைவர் ஆவுடையப்பன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ், சீரோ – மலங்கரா கத்தோலிக்க திருச்சபை பேராயர் கிளிமீஸ் பாசெலோயிஸ், கத்தோலிக்க ஆயர் பேரவை தலைவர் பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி, மதுரை மாவட்ட பேராயர் அந்தோணிசாமி சவரிமுத்து, தென்னிந்திய திருச்சபை பேராயர் பர்ணபாஸ், சாந்தோம் பேராலய அதிபர் அருட்தந்தை வின்சென்ட் சின்னதுரை உள்ளிட்ட பேராயர்கள், அய்யா வழி சமய தலைவர் பாலபிரஜாபதி அடிகளார், ஸ்ரீமத் பரசமய கோளரி நாதர் ஆதினம் சரஸ்வதி பரமச்சாரிய சுவாமிகள், பேராசிரியர் முகமது இல்யாஸ் உஸ்மானி, ஜாமியா மஜீத் முதன்மை இமாம் மௌலவி கே.ஏ. அப்துல் அலிம், உலக அமைதி புத்தர் கோயில் புத்தபிக்கு மசோவ் இஸி தானீஜீ, சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அருட்தந்தை ஜோ. அருண், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் பெர்னான்டஸ் ரத்தினராஜா, கிறிஸ்துவ தேவாலயங்களின் தலைமை போதகர்கள், பெருந்திரளான கிறிஸ்துவ சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2025) திருநெல்வேலியில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில், நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2025) திருநெல்வேலியில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில், சான்டா கிளாஸ் வேடமணிந்த குழந்தைகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2025) திருநெல்வேலியில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில், தென்னிந்திய திருச்சபையின் திருநெல்வேலி திருமண்டலம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள சாராள் தக்கர் கன்வென்ஷன் சென்டர் பிரதான நுழைவாயிலை திறந்து வைத்தார்.







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2025) திருநெல்வேலியில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில், கிறிஸ்துமஸ் கேக் வெட்டி, கிறிஸ்துவ, இஸ்லாமிய, இந்து, புத்தபிக்கு உள்ளிட்ட பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு ஊட்டினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் இந்தியாவின் அறிவுசார் எதிர்காலத்தை வடிவமைப்பதில்

# தமிழ்நாடு மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது!



## தொழில் வழிகாட்டி நிறுவனம் தகவல்!

சென்னை, டிச. 22 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு சிந்தனைகளுடன் கூடிய கடுமையான உழைப்புகளின் பயனாக வெற்றி மேல் வெற்றி காண்கிறது தமிழ்நாடு! தொழில் வழிகாட்டி நிறுவன அறிவிப்பின்படி இந்தியாவின் அறிவுசார் எதிர்காலத்தை வடிவமைக்கும் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனைகளுடன் கூடிய கடுமையான உழைப்புகளின் பயனாகத் தமிழ்நாடு 2021 ஆம் ஆண்டு தொடங்கி அபரிமிதமான முன்னேற்றங்களைப்படைத்து இந்தியாவின் மிகச்சிறந்த மாநிலமாக எழுச்சி பெற்றுள்ளது.

அண்மைச் சில நாள்களுக்கு முன் ஒன்றிய அரசின் இந்திய ரிசர்வ் வங்கி இந்திய மாநிலங்களின் வளர்ச்சி நிலைகள் குறித்த புள்ளி விவரங்களை வெளியிட்டு உள்நாட்டு உற்பத்திகளில் (GSDP) தமிழ்நாடு 16 சதவீதம் பெற்று இந்தியாவில் உச்சம் கண்டுள்ளது எனப் புதிய சாதனையை வெளிப்படுத்தியது.

**புதிய சாதனை படைத்துள்ளது!**

அதனை தொடர்ந்து, 18.12.2025 அன்று தொழில் வழிகாட்டி நிறுவனம் வெளியிட்டுள்ள இந்திய காப்புரிமைப் பதிவுகளில் தமிழ்நாடு மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளது; மற்ற மாநிலங்களை விட மிக பெரிய இடைவெளியுடன் 23 சதவீதம் வளர்ச்சிகண்டு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது என்னும் விவரம் தெரிய வந்துள்ளது.

அதாவது, இந்தியாவில் காப்புரிமை (Patents) தாக்கல் செய்வதில் தமிழ்நாடு முதலிடம் பிடித்து, நாட்டின் அறிவுசார் தலைநகராகத் தனது நிலையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.இந்திய அளவில் பதிவுக்காக விண்ணப்பிக்கப்பட்ட மொத்தம் (68,201), காப்புரிமைகளில் தமிழ்நாடு மட்டுமே 15,440 காப்புரிமைகளைப் பதிவு செய்துள்ளது. இது நாட்டின் மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 23 சதவீதம் ஆகும். இப்படி, காப்புரிமை பெறுவதில் மற்ற மாநிலங்களை விடத் தமிழ்நாடு மிகப்பெரிய இடைவெளியில் முன்னிலை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.




**வளர்ச்சி விகிதம்:**

முந்தைய 2023-2024 ஆம் நிதியாண்டோடு ஒப்பிடுகையில், 2024-2025 ஆம் நிதியாண்டில் காப்புரிமை தாக்கல் செய்வது 9,565லிருந்து 15,440 ஆக உயர்ந்துள்ளது. இந்த 62 சதவீதம் வளர்ச்சி, மாநிலத்தில் உள்நாட்டுக் கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் அதிவேகமாக விரைவுபடுத்தப்பட்டு வருவதைப் பிரதிபலிக்கிறது.

தமிழ்நாட்டின் ஆழமான ஆராய்ச்சித் தளம், வலுவான தொழில்முறை வலிமை, கல்வி நிறுவனங்களுக்கும் தொழில் துறையினருக்கும் இடையே நிலவும் நெருக்கமான ஒருங்கிணைந்த சூழல் (Academia-Industry Ecosystem) ஆகியவை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைக்கு இவை முக்கியக் காரணங்களாக அமைந்துள்ளன.

இந்தத் தொடர் வளர்ச்சியின் மூலம், இந்தியாவின் அறிவுசார் சொத்துரிமை மற்றும் கண்டுபிடிப்புத் துறையில் தமிழ்நாடு ஒரு மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.